?????????????? ???? ?????? ???????

இலங்கை மீதான தீர்மானத்துக்கு தலைமை தாங்குவது பிரிட்டனின் நட்புறவற்ற செயல் என்று வெளியுறவு அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை மீதான புதுப்பிக்கப்பட்ட வரைவு தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை மீது முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானம் 'நாட்டின் இறையாண்மையை மீறுவதாகும்' என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கை பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மீளாய்வு செய்ய வேண்டும் என்றும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்த வேண்டும் என்றும் மனித உரிமைகள் பேரவையில் தீர்மானத்தை முன்வைத்துள்ள நாடுகள் அழைப்பு விடுத்துள்ளன.

இவ்வாறானதொரு தீர்மானத்துக்கு தலைமை தாங்குவது, 'ஒரு பொதுநலவாய உறுப்பினரான இலங்கை மீது பிரிட்டனின் நட்புறவற்ற செயலாகும்' என்றும் வெளியுறவு அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

?????????? ?????????? ?????????? ?????????? ?????????? ?????? ??????

???????? ???? ????????? ????? ????????

அம்பிகை செல்வக்குமாரின் சர்வதேச நீதிகோரிய போராட்டம் இன்றுடன் முடிவுக்கு வந்தாலும் இந்த போராட்டத்தை நாம் தொடர்ந்து வெவ்வேறு வழிகளில் முன்னெடுத்து சென்றால் தான் தமிழிழ் இனப்படுகொலைக்கு நீதி கோரமுடியும் என சிரேஸ்ட சட்ட ஆலோசகரும் வழக்குரைஞருமான திரு. அருண் கணநாதன் தெரிவித்துள்ளார்.

தமிழினப்படுகொலைக்கு சர்வதேச நீதி கோரி பிரித்தானிய அரசிடம் 4 அம்சக்கோரிக்கைளை முன்வைத்து இன்றுடன் 17 நாட்கள் உண்ணாவிரப்போராட்டத்தை மேற்கொண்டிருந்த திருமதி அம்பிகை செல்வக்குமாரின் உண்ணாவிரத நிறைவு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

பிரித்தானிய அரசு அம்பிகையின் போராட்டம் தொடர்பில் நேரடியான பிரசன்னத்தை தவிர்த்திருந்த போதிலும் இன்று பிரித்தானிய வெளிநாட்டு அமைச்சிலிருந்து தொலைபேசி வாயிலான அம்பிகையின் நலனில் தாங்கள் மிகுந்த அக்கறை கொண்டிருப்பதாக தெரிவித்ததுடன் அவரின் கோரிக்கைளில் ஒன்றாவது நிச்சயம் நிறைவேற்றப்படும் எனவும் தெரிவித்திருந்தார்கள் என அவர் கூறினார்.

https://youtu.be/b25yQAmObT8